# திருமுருகாற்றுப்படையில் புராணக் கூறுகள்

***முனைவர் ஐ.இந்திரா***
தமிழ்த்துறைத் தலைவர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மானூர்

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7721

**முன்னுரை**

புராணங்கள் என்றாலே தொன்மையானவை என்று பொருள். வேத மந்திரங்களை ஓதி செய்யப்படும் வேள்விக்குக் கிரியைகளையும் வளர்க்கும் விளக்கும் பிரமாணங்களில் புராணங்கள் ஐந்தாவது வேதமாக சுட்டப்படுகின்றன வேத காலத்தில் தனி இலக்கியமாகாத புராணங்கள், பிரமாணங்களின் காலத்தில் தனி இலக்கியமாக மாறிவிட்டன. மகாபாரதம் இன்றைய நிலையை அடைவதற்கு முன்பே புராணங்கள் தனி இலக்கியமாக வளர்ந்து விட்டன. நாள்தோறும் புராணங்கள் கேட்பதும் கற்பதும் இளவரசர்களின் கல்விக் கூறுகள் ஒன்றாக இருந்ததை அர்த்த சாஸ்திரம் சுட்டுகிறது. தொல்காப்பியர் கூறும் தொன்மை என்னும் இலக்கிய வகை புராணத்தோடு தொடர்புப்படுத்தப்படுகிறது.

**புராணங்கள்**

மனித வாழ்வியலில் உள்ள எல்லா தத்துவ உண்மைகளைப் பாமரர்கள் புரிந்து கொள்ள கடினமானவையாக இருந்தன. எனவே, அவை பாமர மக்களையும் எளிமையாகச் சென்றடையும் வகையில் நீதிக் கதைகள் வடிவில் தொகுக்கப்பட்டன அவ்வாறு தொகுக்கப்பட்ட கதைகள் வாழ்வில் பேருண்மைகளை அனைவருக்கும் உணர்த்திடும் உண்மையை வெளிக்கொணர்தல் என்ற அடிப்படையில் புராணங்கள் தொகுக்கப்பட்டன.

**புராணங்கள் அறிஞர்கள் தரும் விளக்கம்**

ஆலன் டண்டிஸ் என்பவர், “உலகமும் மனிதனும் தற்போதைய வடிவில் எப்படி வந்து சேர்ந்தனர் என்பதை விளக்குவதற்காக புனிதமாக எடுத்துரைக்கப்படும் ஒன்று புராணம்””[1] என்று கூறுகிறார்.

விளாடிமிர் பிராப், “தெய்வத்தன்மை வாய்ந்தோரையும் தெய்வங்களையும் பற்றிய கதைகள் புராணங்களாகும். அவர்களையும், அவர்களைப் பற்றிய கதைகளையும் மக்கள் உண்மையென்று நம்புகின்றனர்”” 2 என்று கூறுகிறார்.

"கடவுளர்கள் புராணத் தலைவர்கள் மாபெரும் நிகழ்ச்சிகள் போன்றவற்றைக் கொடுமைப்படுத்தி விளக்குவதற்கு முயன்ற மக்களின் பழங்கதைகள் புராணமாக வளர்ந்தது"[3] என்று ந.பிச்சமூர்த்தி குறிப்பிடுகிறார்.

### திருமுருகாற்றுப்படையில் காணப்படும் புராணச் செய்திகள்

### சூரனை அழித்த செய்தி

சூரபத்மன் சிவனை நோக்கிக் கடும் தவம் புரிந்து 108 இயக்கம் உயிர் வாழவும், 18 அண்டம் அரசாளும் இந்திர ஞானம் எனும் தேரையும் வரமாகப் பெற்றான். மேலும், தனக்கு சாகா வரம் வேண்டும் என சூரபத்மன் சிவனிடம் கேட்டான். பிறந்தவன் மடிந்தே தீர வேண்டும் என்ற சிவன் எந்த வகையில் அவனுக்கு அழிவு வரவேண்டும் எனக் கேட்டார் சூரபத்மன் புத்திசாலித்தனமாக ஒரு பெண்ணின் வயிற்றில் பிறக்காத பிள்ளையால் தான் தனக்கு அழிவு வர வேண்டும் எனக் கேட்டான்.

பெண்ணையன்றி வேறு யாரால் சீவன்களை உற்பத்தி செய்ய முடியும் என்பது அவனது கணக்கு இந்த வரத்தைப் பெற்ற சூரபத்மன் அவனுடன் பிறந்தவர்களும் தன் குல குருவான சங்கராச்சாரியாரிடம் ஆசி பெற்றுத் தம்மைப் போல பலரை உருவாக்கி, அந்தச் சாரசங்கள் எல்லாவற்றையும் ஆண்டு இந்திரன் முதலான முப்பத்து முக்கோடி கோடி தேவர்களும் சிறையிலடைத்தனர்.

### சிவனிடம் முறையிடல்

தேவர்கள் தங்களை காப்பாற்றும்படி கைலாயம் சென்று முறையிட்டனர். சிவன் தன் ஆறு நெற்றிக்கண்களையும் திறக்க (ஈசானம், தத்புருசும், அகோரம், வாமதேபம், சத்யயோஜாதம், அதோமுகம், மனம்) ஆகியவற்றிலிருந்து தோன்றிய ஆறு தீப்பொறிகளையும் சேர்த்து முருகப்பெருமான் திருவுருவம் பெற்றார்.

### அசுரர்களை அழித்தல்

தேவகுரு பிரகஸ்பதி மூலம் அசுரர்களின் வரலாற்றை அறிந்தார். திருக் கரங்களில் கொண்டு தேவர்களை பயப்பட வேண்டாம் என்று கூறினார். முருகன் "எமகடம்" என்ற பாசறையில் வீற்றிருக்கும் தூதரான வீரவாகுவை அனுப்பினார். வீரவாகு தனது படைகளுடன் மகேந்திர புரியினுள் நுழைந்தார். ஆனால், சூரனை வெல்ல முடியவில்லை. அடுத்து முருகனே போருக்குச் சென்றான். சூரியன் மறையும் வேளையில் சூரபத்மன் ஓடி ஒழிந்தான். பின்னர் சூரபத்மன் 1008 அண்டங்களில் உள்ள சேனைகளின் துணையோடு முருகனிடம் போர் செய்யப் புறப்பட்டான்.

### மாமர உருவெடுத்தல்

பல மாயங்களைச் செய்த சூரபத்மன் பலவாறு போரிட்டுத் திடீரென மாமரம் போல் உருவெடுத்தான். அம்மரத்தை வேரோடு அழித்தான் இதனை,

**"கடுஞ்சூர் மாமுதல் தடித்தருத்த**
**வேலோடு போராள"[4]**

என்று பரிபாடல் கூறுகிறது.

### கடலின் நடுவே புகுதல்

சூரபத்மன் பழைய வடிவெடுத்துக் கடலின் நடுவே புகுந்தான். முருகன் சூரபத்மனின் உடலை இரு கூறாக்கினான். ஒன்று மயிலாகவும் மற்றொன்று சேவலாகவும் தன் வாகனம் ஆக்கினான். இதனை,

**"அங்கம் இருகூராய் அடல்மயிலும்**
**சேவலுமாய்"[5]**

என்று கந்தர் கலிவெண்பா எடுத்துரைக்கிறது.

### இந்திரன் ஆயிரம் கண் பெற்ற வரலாறு

படைக்கும் கடவுள் பிரம்மன், அழகின் மூலப்பொருள் கொண்டு படைத்த பேரழகி அகல்யை, கௌதம் எனும் முனிவரையும் மணமுடித்துக் கொண்டார். பிரம்மன் படைத்த பேரழகி மீது இந்திரனுக்கு ஆசை

வந்தது. எனவே, அகல்யையைப் பின் தொடர ஆரம்பித்தார். இந்திரன் ஆசையின் எல்லையைக் கடந்து அகல்யை அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் புமிக்குச் சென்றார்.

பேரழகி அகல்யாவை அடைய அவளது கணவனின் தோற்றத்தில் உருமாறிச் சென்றார். அவருடன் உறவு கொண்டார். ஆனால் விதியின் காரணத்தால் அன்றே அகப்பட்டான் இந்திரன். இந்தச் செய்த பாவச் செயலுக்குத் தண்டனையாக கௌதம முனிவர் இந்திரனைச் சபித்தார். இந்திரனுக்கு முனிவர் கொடுத்த சாபம் தான் உடல் முழுவதும்ஆயிரம் பெண் குறி கொள்வதாகவும், உடலெங்கும் ஆயிரம் பெண் குறிகள் கொண்டு வெயயே கூட செல்ல முடியாமல் வெற்றி கொள்ளும் நிலைக்கு ஆளானார் இந்திரன். இதனை கம்பராமாயணம்,

> **"தீ விழி சிந்த நோக்குச் செய்ததை யுனர்ந்து செய்ய**
> **தூயவன் அவனை நின்கைச் சுடுசர மனையை சொல்லால்**
> **ஆயிரம் மாதர்க்குள்ள அறிகுறி யுனக் குண்டாகென்**
> **நேயினன் அவையை லாம்வந் தியைந்தன இமைப்பின் முன்னம்""[6]**

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. பிரம்மன் உட்பட பிற கடவுளுக்கும் இது பற்றி அறியவர முனிவரைக் கண்டு பிரம்மன், இது மிகவும் கொடியது என்று கூறினார். அதன்பின் சாந்தமான முனிவர் அந்த ஆயிரம் பெண்குறி மற்றவர்களுக்குக் கண்களாகத்தான் தெரியும் என சாபத்தை மாற்றினார் என்று கூறப்படுகிறது.

முப்புரம் எரித்த செய்தி

இறைவன் தீமை செய்யும் அரசர்களிடமிருந்து இவ்வுலகத்தைக் காக்கும் பொருட்டு, அவர்களை வதம் செய்கிறார். தாரகன் புதல்வர்கள் வித்யுன்மாலி, தாரகாட்சன், கமலாட்சன் என்னும் மூவர். இவர்கள் பிரம்மனிடம் பொன், வெள்ளி, இரும்பாலான மூன்று பறக்கும் நகரங்களைப் பெற்றனர். மூன்று நகரங்களையும் ஒரே பாணத்தால் அழிக்க வல்லவனால் மட்டுமே தங்களுக்கு மரணம் நேர வேண்டுமென்ற வரத்தையும் பெற்றனர். அசுரர்கள் திரிபுரம் வழியாகத் தாம் நினைத்த இடங்களுக்குச் சென்று தேவர்களையும் முனிவர்களையும் துன்பப்படுத்தினர். தேவர்கள் சிவனடி வேண்டி நின்றனர்.

### சிரித்தே எரித்தார்

சிவன் புமியைத் தேராகவும், திங்களும் ஞாயிறும் தேர் சக்கரங்களாகவும், நான்மறையைக் குதிரைகளாகவும், நான்முகனைத் தேரோட்டியாகவும், மேருமலையை வில்லாகவும், ஆதிசேடனை நாணாகவும், அக்கினியை முனையாக உடைய அம்பாகவும் பிற அமரர்களைப் போர்க் கருவிகளாகவும் அமைத்துக் கொண்டு போர் செய்யப் புறப்பட்டார். இதனை,

> **"ஆதி அந்தணன் அறிந்துபாரி கொளுவ**
> **வேத மாம்புண் வையத்தோர் ஊர்ந்து**
> **நாகம் நாணா மனை வில்லாக**
> **மூவகை ஆரெயில் அம்பின் முளிய**
> **மாதிரம் அடில எய்து-""[7]**

என்ற பாடல் வரிகள் கூறுகின்றன.

அமரர்கள் தங்கள் வல்லமையை நினைத்துச் செருக்கு கொண்டனர். அதனை உணர்ந்த சிவன் அவர்களால் உதவியை ஏற்காமல் தானே ஒரு புன்சிரிப்பு செய்து அரக்கர் அனைவரையும் முப்புரங்களோடு எரித்தார். இதனை,

> **"ஏற்றார் மூதூ ரெழில் நகைப் யெரியின்**
> **வீழ்வித் தாங்கன்""[8]**

என்று சிவன் சிரித்த சிரிப்பினால் திரிபுரம் எரிந்து வீழ்ந்தது என மாணிக்கவாசகன் குறிப்படுகிறார். மேலும்,

> **"முப்புர மாவது மும்மல காரியம்**
> **அப்புரம் யெதமை யார்அறிவாரே""[9]**

எனும் வரிகளில் திரிபுரம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்னும் மன அழுக்குகளை அழித்தல் என்று திருமுலர் கூறுகிறார்.

### அயனை விடுவித்த செய்தி

பண்டொரு காலத்தே முருகப்பெருமான், அகந்தை கொண்ட அயனின் அகந்தையைப் போக்கும் பொருட்டு பரனவ மந்திரத்தின் பொருள் யாதென வினவ, அவன் அதற்கு விடை தந்திடாமையின், தலையில் குட்டிச் சிறையிட்டனன் என்றும், அயனைச் சிறையிட்டமையான் படைப்புத் தொழில் நடவாதொழிய, ஏனை தேவர்கட்குரிய ஏனைத் தொழில்களும் நடவது ஒழிந்தன என்றும், தலைமையடிந்த தேவர்கள் அவனைச் சிறைவிடுதலை செய்து மீண்டும் படைப்புத்தொழில் செய்விக்குமாறு கூறினர். இதனை,

> **“..படைப்போன் அகந்தை யுரைப்ப மறை. யாதியெழுத் தொன்று உகந்த பிரணவத்தி னுண்மை புகன்றிலையால் சிட்டித் தொழிலதனைச் செய்வத் தெங்ஙனென்றுமுனம்**
> **குட்டிச் சிறையிருத்தும் கோமானே”**[10]

என்று கந்தர்கலி வெண்பா கூறுகின்றது.

### முடிவுரை

சங்க காலத்தில் புராணக் கதைகள் மக்களுடைய வாய்மொழியாக வழங்கப்பட்டது. புராணங்கள் வாய்மொழியாக தோன்றி இலக்கியத்தில் வலியுறுத்தப்பட்டு, மதக் கோட்பாடுகள் உருவாகி அதன் பின்னர், தத்துவ விளக்கங்கள் பெற்றுள்ளது எனலாம். முருகாற்றுப்படையில் கண் உள்ள புராணக் கூறுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### அடிக்குறிப்புகள்

1. சி. பொன்னுத்தாய்., தொன்மக் கதைகள் பன்முகநோக்கு, ப.14
2. தே. லூர்து.,நாட்டார் வழக்காறுகள் சில அடிப்படைகள்., ப.136.
3. சி.பொன்னுத்தாய்., மு.கூ.நூ, பக்.17-18.
4. முனைவர் பெ.சுப்பிரமணியன் (உ.ஆ)., பரிபாடல், பா.எ 18.
5. பி.ரா.நடராஜன்(உ.ஆ).,கந்தர்கலிெ வண்பா.,பா.வ. 100 -101.
6. எம். நாராயணாவேலுப்பிள்ளை(உ. ஆ).,கம்பராமாயணம். பா.எ.78.
7. பெ. சுப்பிரமணியன் (உ.ஆ)., பரிபாடல் பா.எ 5
8. மாணிக்கவாசகர், திருவாசகம், பா.வ.159 - 160.
9. திருமந்திரம்., திருமூலர், பா.எ.343.
10. பி.ரா.நடராசன் (உ.ஆ)., கந்தரகலி வெண்பா, பா.294.